வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# லஷ்மியின் 'கங்கையும் வந்தாள்' எனும் புதினத்தில் பெண்ணின் வாழ்வியல்

**முனைவர் ச. சேவியர்**, தமிழ்த்துறைத் தலைவர், இலயோலா கல்லூரி, மெட்டாலா, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.

மின்னஞ்சல் முகவரி -xaviermphd@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

சமுதாயத்தில் மக்கள் பலவிதமான பிரச்சனைகளையும் சிக்கல்களையும் சந்திக்கின்றன என்றாலும் பெண்களின் உரிமை போராட்டமும் சமுதாயத்தில் முக்கிய பிரச்சனையாக அமைகின்றது. இந்த புதினத்தில் வரும் கதாநாயகி கங்கா பொறுமையில் பூமியையும், சகிப்புத்தன்மையில் கங்கையையும் ஒத்தே விளங்குகிறாள். அந்த காரணம் கணவன் செய்த கொடுமை எல்லாம் பொறுத்துக்கொண்டு, அவமானங்கள் எல்லாம் தாங்கிகொண்டு குடும்பத்தில் புரட்சிப் பெண்ணாக விளக்குகின்றாள். பெண்ணுரிமைக்கு இலக்கணமாகத் திகழ்கின்றாள். கடைசிவரையும் கங்கா பிற பொருள்களுக்கு ஆசைபடாமல் கணவனுக்கு நேர்மையாக வாழ்ந்தாள். மேலும் இந்த புதினம் குடும்ப நலனையும் சமூக சிந்தனையும் வளர்க்கும் விதமாக அமைக்கின்றது.

**கலைச்சொற்கள்:**

1. புருஷன் - கணவன்
2. வாழா வெட்டி - கணவணோடு சேர்ந்து வாழப் பெறாதவள்
3. துலக்கி - மெருகு
4. வெகுளி - கோபம், மிகுந்த சினம்ட
5. சம்மதம் - இணக்கம் தெரிவித்தல்
6. கட்டடம் - கட்டிடம்
7. கற்பு - பிற ஆடவரை நினைக்காமை
8. பெண்ணுரிமை - ஆணுக்கு நிகரான பெண்களின் உரிமை
9. களங்கம் - மரு, கறை, மாசு
10. போகம் - இன்பம்

**முன்னுரை:**

சமுதாயத்தில் மக்கள் பலவிதமான பிரச்சனைகளையும் சிக்கல்களையும் சந்திக்கின்றனர் என்றாலும் பெண்களின் உரிமை போராட்டமும் சமுதாயத்தில் முக்கிய பிரச்சனையாக அமைகின்றுது. சங்ககாலத்தில் பெண்கள் அடிமைபட்டவர்களாக வாழ்ந்தனர். ஆனால் இன்றோ அடிமைத்தனத்தைப் போக்க பெண்கள் விழிப்புணர்வுடன் சிந்திக்கத் தொடங்கி உள்ளனர். இந்த புதினத்தில் வரும் கதாநாயகி கங்கா பொறுமையில் பூமியையும், சகிப்புத் தனிமையில் கங்கையையும் ஒத்தே விளங்குகிறாள். லஷ்மியின் 'கங்கையும் வந்தாள்' எனும் புதினத்தில் பெண்கள் சமுதாயத்தில் எவ்வாறு சிக்கல்களைத் தீர்வு காணுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்ணியம்:**

**"Feminism என்ற ஆங்கிலச் சொல் Feminism என்ற இலத்தீன் சொல்லில் இருந்து மருவி வந்ததாகும். Feminism என்ற சொல்லுக்கு பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ளது. பெண்ணின் தாழ்நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழி முறைகளே பெண்ணியம் என்ற வரையறையை கார்ப்பன்**"[1] என்பவர் கூறுவதை அறியலாம்.

**பெண்ணின் கற்பு நிலைக்கு களங்கம் ஏற்படுத்தல்**

கற்பு என்பது தன் கணவனைத் தவிர பிற ஆடவரை மனதாலும் நினைக்காத தன்மையாகும். பெண் அனைத்து இன்பங்களையும் அடைவதற்குத் துணையாய் இருப்பவள். பெண்ணினத்தின் கற்பு தெய்வீகப் பொலிவுடையதாகும். என்று வள்ளுவர் இதனை,

**"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**தின்மை உண்டாகப்பெறின்**"[2]

என்று கற்பின் திறத்தைக் குறிப்பிடுகின்றார்.

ஆண் மகனைச் சாந்தமாக்கவே அழகான பெண்ணை கணவன் படைத்திருக்கிறான். இதனை தாமஸ் ஆட்லே,

**"பெண்கள் இல்லாவிடில் ஆண்கள்**
**வெறும் மிருகங்கள் தான்"**[3]

என்ற வரியில் விளக்கின்றார்.

கங்காவின் அப்பா ரத்னசாமி நரேந்திரன் வைரப்பிள்ளையாரைத் திருடிவிட்டக் காரணத்தால் கங்காவை பழிவாங்க துடிக்கின்றான். மாதா பிதா செய்த பாவம் மக்கள் தலையில் என்பது போல ரத்னசாமி செய்த குற்றத்திற்கு கங்கா தண்டனை அடைகின்றாள்.

> **“கங்கா என் மனைவி ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அவள் சுமக்கும் குழந்தை என்னுடையதுதான் என்பதை நான் எப்படி நம்ப முடியும்”[4]**

> **“நான் ஒதுக்கி வச்சிருக்கும் இவள். கர்ப்பம்னு சொன்ன அந்தக் குழந்தைக்கு நான் எப்படி தகப்பனாவேன்? மரியாதையா இரண்டு பேரும் திரும்பி போய் விடுங்கோ”[5]**

கங்காவின் கணவன் சகிக்கவோ, மன்னிக்கவோ இயலாதபடி அவளுக்கு வாழாவெட்டி பட்டமும் வேசி பட்டமும் கட்டி கற்பிற்கு களங்கம் ஏற்படுத்தினான்.

**கங்காவின் பொறுமை குணம்:**

சமுதாயத்தில் பெண்களுக்கு ஆண்கள் பலவிதமான துன்பங்களைக் செய்கின்றனர். அதை எல்லாம் பொறுத்துக் கொள்வதோடு இல்லாமல், அவன் செய்கின்ற குடி, சூதாட்டம் ஒழுக்கக்கேடு ஆகியவைகளைக் கொண்டிருந்தாலும் அதை எதிர்த்தும் அவனுக்கு ஆட்பட்டு வாழவேண்டிய சூழலில் பெண் காணப்படுகின்றாள்.

இத்தகைய பெண்ணடிமைத்தை தந்தை பெரியார்,

> **“பெண்மக்களை இன்று ஆண்மக்கள்**
>
> **நடத்தும் மாதரியானது**
>
> **மேல்சாதி காரன்**
>
> **கீழ்சாதிகாரனை**
>
> **நடத்துவதைவிட”[6]**

என்ற கவிதையின் அறியலாம்.கங்கா எவ்வளவு பிரச்சனைகளையும் சிக்கல்களையும் எப்படி பொறுமையுடன் இருக்கிறாள் என்பதை ரத்னசாமி விளக்குகின்றார்.

**"என் மக தான் கிழிச்ச கோட்டைத் தாண்டவே மாட்டாள். என் பொண்ணுன்னு நான் பெருமை பேசிக்கலை. அவளை நான் படிக்க வைத்தேன். பாட்டு கத்துக்க வச்சேன், வீணை கூட வாசிப்பா, பாவம் தாயில்லாத பெண், ரொம்ப பயந்த சுபாவம், அடக்கமானவள், எதிர்த்துப் பேசவே தெரியாத வெகுளி"**[7] என்று ரத்னசாமி குறிப்பிடுகின்றார்.

**கங்காவைப் போகப் பொருளாக எண்ணுதல்:**

பெண் என்பவள் ஆண்களின் ஆசை உணர்வுகளுக்குப் பயன்படும் போகப் பொருளாகக் காணப்படுகின்றாள். பண்டைய காலத்தொட்டு இக்காலம் வரை ஆண்கள் பெண்ணின் உடலழகில் மயங்கி அவர்களைக் கற்பழித்து கொலை செய்கின்றனர்.

ஆனால் இன்று பெண் அடிமை வேலைக்கும், உடலின் பத்துக்கும் மட்டுமே பயன்படுத்தப்பட்டாள் என்பதனை வைரமுத்துவின்,

> **"பாவம் மனைவி**
> **இந்த**
> **இல்லற கிரிக்கெட்டில்**
> **சமையலறைக்கும்**
> **ரன்கள் எடுத்தே**
> **ரணமாய் போனாள்"**[8]

என்ற கவிதை தெளிவாக விளக்குகின்றது. கங்கா சமையலுக்கும் படுக்கை அறைக்கும் மட்டுமே பயன்படுத்தப்படுகிறாள் லக்ஷ்மி தனது புதினத்தில்

> **"சமையலுக்கு முன் வீட்டைப் பெருக்கி துடைத்துச் சுத்தம் செய்து பாத்திரங்களைத் துலக்கி வைத்து, துணிகளைத் துவைத்து காய வைத்து விட்டு, உணவு தயாரிப்பதற்கு அவருக்கு முதுகு பிளந்து விடும் போல வேதனை"**[9]
>
> **"அவனைக் காலம் முழுவதும் காதலித்து நல்லதொரு மனைவியாக, தோழியாக, தாயைப் போன்ற பரிவுடன் அவனுடன் இந்த கங்கா வாழ்வாளே"**[10]

ஆனால் காலம் காலமாக பெண்களுக்கு நடந்து வரும் கொடுமைகளிலிருந்து விடுபடப் பெண்கள் துணிவுடன் போராட வேண்டும். ஆணின் எண்ணத்தை

முழுவதும் மாற்ற வேண்டும். எனவே இப்படிபட்ட நிலை இருந்தால் பெண்ணைத் தாயாக மதிக்கும் நிலை ஏற்படும்.

**பெண்ணுரிமை:**

பெண்ணுரிமை என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு தீர்ப்பதாகும். இதனைப் பெண்ணியம் என்பர். இக்காலக் கட்டத்தில் பெண்களுக்குப் பல வகையான சுதந்திரமும் உரிமையும் கிடைத்துள்ளன. ஆனால் பெண்களின் சிக்கல்களுக்குத் தீர்வுகளான பெண்ணிய அமைப்புகள் உருவாயின. அவ்விழிப்புணர்வு மூலம் பெண்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டுச் சமுதாயத்தில் பெண்ணின் நிலை உயர வழிவகை செய்தது.

**“நீ ரொம்பவே சந்தேகப் படறே! இரு அவளைக் கூப்பிடுகிறேன் என்றவர், கங்கா! இப்படிவாம்மா! உற்சாகமாக ஓங்கிக்குரல் கொடுத்தார். இதோ வந்துட்டேன் அப்பா என்றபடி மெள்ளக் கூடத்துக்கு வந்தாள்”.**[11]

**“உன்னைத் தனக்குக் கட்டிக் கொடுக்கச்சொல்கிறார். எனக்குச் சம்மதம், உன் விருப்பத்தை நேரடியாகக் கேட்கணுமாம். நீயே சொல்லிவிடும்மா! உங்க பேச்சுக்கு நான் மறு பேச்சு சொன்னதில்லையே அப்பா”**[12]

என்ற தன் விருப்பத்தை நேரடியாக கங்கா நரேந்திரனிடம் கூறினாள். எனவே இந்த புதினத்தில் பெண்ணுரிமை வளர்ச்சி அழகாக அறியமுடிகின்றது.

**கங்கா கணவனைத் தெய்வமாக மதித்தல்:**

குடும்பம் என்ற கோயிலில் மனைவியின் சொல்லை மந்திரமாக ஏற்கும் கணவன், அவருக்கு கண்கண்ட தெய்வமாக விளங்குவான். எனவே கணவன் கண்கண்ட தெய்வம் என்ற சொற் றொடருக்குள்ளேயே மனைவியும் கணவனுக்கு கண்கண்ட தெய்வம் என்பது அடங்கி விடுகிறது.

**“என் கணவன் மேற்பார்வையில் நடக்கும் கட்டட வேலை ஒன்றில் அவருக்குப் பெருத்த விபத்து ஏற்பட்டு விட்டதாம், மருத்துவ மனையில் நினைவில்லாமல் சேர்க்கப்பட்டிருக்கிறார்”**[13]

என்று சிவகாமி அம்மாளிடம் கூறுகிறாள். நான் உடனடியாகக் குழந்தையுடன் கிளம்புகிறேன் என்று கங்கா கூறிச் சென்றாள்.

**“கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்”**[14]

என்ற பழமொழிகேற்ப கங்கா தனது கணவன் செய்த கொடுமைக்கு அளவே இல்லை. அவளிடம் பேசுவதும் இல்லை. இனி வாழ்வதும் இல்லை என்று இருந்தவள் கணவனுக்கு ஆபத்து என்று வந்ததும் அவன் தனக்குச் செய்த கொடுமைகளை எல்லாம் மறந்து அவனுக்கு பணிவிடைசெய்ய முன் வருகிறாள். பெண்கள் இல்லையேல் இந்த உலகில் எந்த வேலையும் நடைபெறாது. துன்பத்திற்கு இன்பம், பசிக்கு உணவு, சண்டைக்குச் சமர்தானம், வீரத்திற்கு வெற்றி, புயலுக்கு அமைதி இவை போன்ற எண்ணற்ற காரியங்கள் பெண்மையால் திகழ்கின்றன என்று மாப்பசான் விளக்குகின்றார். பெண்கள் தங்கள் கணவனைக் கண்கண்ட தெய்வமாக நினைத்து போற்றி வருகின்றனர் என்பதை உணர முடிகின்றது.

**முடிவுரை:**

உலகம் ஆண் - பெண் என்னும் இருபாலராலும் ஆக்கப்பட்டிருக்கிறது. இரண்டும் சேர்ந்த ஒன்றே உலகம் என்பது. இருபாலரும் ஒன்றி இயங்கினாலன்றி உலகம் நல்வழியில் நடைபெறாது. என்று ஆண் - பெண் நிலைப்பாட்டினைத் திரு.வி.க. குறிப்பிடுகின்றார். கங்கா தன்னுடைய பிரச்சனைகளை மட்டுமல்ல, நமக்கு பிரச்சனையாக இருக்கும் பொருட்களையும் கூட ஆண்டவனிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்ற எண்ணம் அவளின் உண்மை நிலையை குறிப்பிடுகின்றது. லக்ஷ்மியின் கங்கையும் வந்தாள் எனும் புதினத்தில் பெண்ணின் வாழ்வியல் வாயிலாக குடும்ப நலனையும் சமூக சிந்தனையும் வளர்க்கும் விதமாக அமைக்கின்றது.

**சான்றெண் விளக்கம்**


1. ச. அங்கயற் கண்ணி, குறுந்தொகையுள் பெண்ணியம் - ப.109
2. மதிவேட்பன், திருக்குறள் - ப.12
3. திரு.வி.க, பெண்ணின் பெருமை - ப.32
4. லஷ்மி, கங்கையும் வந்தாள் -ப.298
5. மேலது ப..299
6. கீ. வீரமணி, தந்தை பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனை ப. 50
7. லஷ்மி, கங்கையும் வந்தாள் -ப.154
8. வைரமுத்து கவிதைகள் ப.54
9. லஷ்மி, கங்கையும் வந்தாள் -ப.146
10. மேலது ப.160
11. மேலது ப..208

12. மேலது ப..258
13. மேலது ப..362
14. இராஜகுரு, பழமொழி ப. 45

**துணை நூல்கள் பட்டியல்**


1. திரு.வி.க, பெண்ணின் பெருமை, பூம்புகார் பதிப்பகம், சென்னை – 600 108
2. மதிவேட்பன்,திருக்குறள், செண்பாக பதிப்பகம், சென்னை – 600 002
3. லஷ்மி, கங்கையும் வந்தாள், பூங்கொடி பதிப்பகம், சென்னை – 600 004
4. கீ. வீரமணி, தந்தை பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனை, பெரியாா சுயமரியாதை பிரச்சார நிறுவனம், சென்னை
5. இராஜகுரு, பழமொழி,இராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனம், சென்னை
6. வைரமுத்து கவிதைகள், சூரியன் பதிப்பகம். சென்னை.